# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசின் சமூகநலத்துறையின் மூலம் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஒருங்கிணைந்த சேவைமையம் (One Stop Centre)-ல் பணிபுரிய தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மேற்ப', இதற்கான விண்ணப்பங்கள் ஈரோடு மாவட்ட இணையதளமுகவரிwww.erode.nic.in–யில் உரியபடிவம் மற்றும் பணியிடம் மற்றும் தகுதிகள் குறித்தவிபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காண் இணையதள முகவரியில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கீழ்க்கண்ட முகவரியில் 27.05.2026 அன்று மாலை 05.00 மணிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தகுதிகள்

| வ.எண் | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | படிப்பு | ஊதியம் |
|---|---|---|---|---|
| 01 | மூத்த ஆலோசகர் | 1 | **கல்வித் தகுதி**: சமூக பணி சார்ந்த முதுகலை பட்டம்/ உளவியலில் முதுகலை பட்டம்<br>**அனுபவம்**<br>:குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம். அரசு, அரசு அல்லாத திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான, பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>பெண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.<br>விண்ணப்பதாரர்கள் ஈரோடு மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். | Rs.22,000/- |
| 02 | தகவல் தொழில் நுட்பபணியாளர் | 1 | **கல்வித் தகுதி**: பணியாளர் அங்கீகரிக்கபட்ட பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் அல்லது கணினிப் பொறியியலில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். கணினிபடிப்பில் முதுகலை பட்டம் அல்லது பட்டயம்<br>**அனுபவம்**: :குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம். அரசு, அரசு அல்லாத திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான, பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>விண்ணப்பதாரர்கள் ஈரோடு மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். | Rs.20,000/- |
| 03 | வழக்கு பணியாளர் | 2 | **கல்வித் தகுதி** :சமூக பணி சார்ந்த பட்டம்/ உளவியலில் பட்டம்<br>**அனுபவம்**: :குறைந்தபட்சம் 1 ஆண்டு அனுபவம். அரசு. அரசு அல்லாத திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான. பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>பெண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.<br>விண்ணப்பதாரர்கள் ஈரோடு மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். | Rs.18,800/- |

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**
மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலகம்
மாவட்ட ஆட்சியரகம்,
6வது தளம்,
ஈரோடு 638 011.
தொலைபேசி எண்:0424-2261405

மாவட்ட சமூகநல அலுவலர்,
ஈரோடு மாவட்டம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
ஈரோடு மாவட்டம்.

ஒ.கோ 18/05/2026

2/2

Scanned with OKEN Scanner